# இலக்கிய நயம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

# இலக்கிய நயம்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**


தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

இலக்கிய நயம்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 11

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2016
தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சிமையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய, அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சிமையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 1, 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

# பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்த ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும் :**

கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

**பாட விடய ஆலோசனை :**

பேராசிரியர், கலாநிதி வ. மகேஸ்வரன்
தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.
பேராசிரியர், கலாநிதி கே. விசாகரூபன்
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
திரு.க.இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென் கிழக்குப் பல்கலைக்கழகம் ஒலுவில்.
கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
செல்வி. வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம் :**

திரு. மு.தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி. நா.சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**வளப் பங்களிப்பு :**

செல்வி. மாகிறித்தா வேதநாயகம்
சிரேஷ்ட ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு.
கலாநிதி. ந. இரவீந்திரன்
விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, மஹரகம.
திருமதி. இ. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், கண்டி.
திருமதி. த. நிறைமதி
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
வவுனியா தெற்கு, வவுனியா.
திரு.ந.அருளானந்தம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம்,
மாத்தளை.
ஜனாப். எம். ம.்.றூப்
ஆசிரியர், புத்/ கொத்தான்தீவு ம.வி, கொத்தான்தீவு.
திரு. ந.யோகலிங்கம்
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், இரத்தினபுரி.
திருமதி. த. மாணிக்கராஜா
ஆசிரியை, கொ/ விவேகானந்தா கல்லூரி, கொழும்பு - 13

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் தொகுதிப் பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் 'இலக்கிய நயம்' எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதே விதமாக நடைமுறைப்படுத்தப்படும். 10 - 11 ஆந் தரங்களுக்காக, வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10 - 11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

10 - 11 ஆந் தரங்களுக்காக, தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமான நான்கு தேர்ச்சிகளின் கீழ் இலக்கிய நயம் பாடத்துக்கான கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'இலக்கிய நயம்' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது, பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இது தொடர்பாக ஆசிரியரின் பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு, சுருக்க விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி, அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் தயாரித்துக் கொள்ளலாம். 'இலக்கிய நயம்' எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

அதற்கமைய தரம் - 11 'இலக்கிய நயம்' எனும் பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க, புதிய உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும்.

**நூலாக்கக் குழு**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03. | கலைத்திட்டக் குழு | v |
| 04. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vi |
| 05. | தேசிய இலக்குகள் | viii |
| 06. | அடிப்படைத் தேர்ச்சிகள் | ix - x |
| 07. | பாடத்திட்டம் | xi |
| 08. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1-33 |

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

### 5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும் நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

### 6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

### 7. “கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)

# பாடத்திட்டம்

## பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 இலக்கியங் களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்து வார். | 1.1 பாடப்பகுதிகளை ஈடுபாட்டுடனும் குரல் ஏற்ற இறக்கத் துடனும் வாசிப்பார். | • உரைநடை இலக்கியங்கள் | • உரைநடை இலக்கியங்களை வாசித்து நயந்தவற்றைக் கூறுவார்.<br>• படைப்புக்களின் நோக்கங்களையும் ஆசிரியர் கூற வந்த விடயங் களையும் கூறுவார்.<br>• படைப்புக்களை விமர்சனம் செய்வார்.<br>- கையாளப்பட்ட மொழிநடை<br>• உரைநடை இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக் களைப் பகுத்து நோக்குவார்.<br>- படிப்பினை<br>- அறக்கருத்து<br>- விழுமியம்<br>- நகைச்சுவை<br>- சமூகப் பார்வை | 04 |
| | | • செய்யுள் இலக்கியங்கள் | • செய்யுள் இலக்கியங்களை வாசித்து நயந்தவற்றைக் கூறுவார்.<br>• ஆக்கத்தின் உருவ, உள்ளடக்கப் பொருத்தப்பாட்டினைக் கூறுவார்.<br>• இலக்கியத்தில் உள்ள சிறப்புக்களைக் குறிப்பிடுவார்.<br>- அணிகள்<br>- கற்பனை<br>- வர்ணனை<br>- மொழி<br>- ஆசிரியர் கூற வந்த விடயம்<br>- கையாளப்பட்ட மொழிநடை<br>• செய்யுள் இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக் களைப் பகுத்து நோக்குவார்.<br>- படிப்பினை - அறக்கருத்து - விழுமியம்<br>- நகைச்சுவை - சமூகப்பார்வை | - |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.2 படைப்புகளை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • படைப்புக்களை நயப்பார்.<br>• படைப்புக்களின் நோக்கங்களை இனங்காண்பார்.<br>- படைப்பாளியின் அனுபவ வெளிப்பாடு<br>- இரசனை வெளிப்பாடு<br>- சமூக நோக்கு<br>- விழுமியங்கள் | -<br>06 |
| xiii | 1.3 படைப்புகள் மூலமாக சமூகத்தையும் தான் வாழும் உலகத்தை - யும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • படைப்புக்கள் பற்றிய கருத்துக்களைப் பின்வருமாறு பகுத்து நோக்குவார்.<br>- தனிமனித இயல்புகள்<br>- குடும்ப உறவுகள்<br>- சமூக ஊடாட்டம்<br>- உலகப்போக்கு<br>- விழுமியங்கள் | 06<br>- |
| | 1.4 விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன் வைப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன் வைப்பார்.<br>- இலக்கியம் கூற முனையும் கருத்துக்கள்<br>- தனிமனித இயல்புகள், குடும்பம், சமூகம் பற்றிய பார்வை<br>- கையாளப்பட்ட உத்திகள்<br>- பாத்திரங்கள்<br>- மொழிநடை | 07<br>- |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 2.0 இலக்கியங்-களைக் கற்று மொழியாற்றலை வெளிப்படுத்துவார். | 2.1 படைப்புக்களில் வெளிப்படும் மொழிப் பிரயோகங்களை நன்கு கிரகித்து விடை - யளிப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • படைப்புக்களின் முக்கிய மொழிப் பிரயோகங்களைத் தொகுத்துக் கூறுவார்.<br>- சொல்லாட்சிகள்<br>- பாத்திர மனவுணர்வுகள்<br>- அரும்பதங்கள்<br>- அணிகள்<br>- பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு<br>- கிளை மொழி | 02<br>02 |
| | 2.2 பாடப் பகுதியின் ஊடாகப் பெற்ற மொழியாற்றலைப் பிரயோகிப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • இலக்கியங்களைக் கற்று, அவற்றில் உள்ள மொழிநடையை இனங்கண்டு பிரயோகிப்பார்.<br>- செய்யுள் நடை / வசன நடை<br>- பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு<br>- கிளை மொழி<br>- பாத்திர மனவுணர்வுகள்<br>- அரும்பதங்கள்<br>- அணிகள் | -<br>04 |
| 3.0 பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். | 3.1 பல்வேறுபட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• கவிதை / செய்யுள் | • பல்வேறுபட்ட படைப்புக்களை இனங்கண்டு அவற்றை வாசிப்பார்.<br>- கவிதை / செய்யுள்<br>- கதை, சிறுகதை<br>- கட்டுரை<br>- நாடகங்கள் | 10<br>- |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 3.2 படைப்புக்கள் குறித்து சிந்தித்து, கலந்துரையாடி, தமது ஆர்வத் - திற்கும் ஆற்றலுக்கும் கற்பனைத் திறனுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• கவிதை / செய்யுள் | • வேறுபட்ட புதிய ஆக்கங்களைப் படைக்க முன்வருவார்.<br>- கவிதை / செய்யுள்<br>- கதை / சிறுகதை<br>- கட்டுரை<br>- நாடகங்கள் | -<br>07 |
| 4.0 இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார். | 4.1 இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.<br>- அறக் கருத்துக்கள் - படிப்பினைகள்<br>- விழுமியங்கள் - சமூகப் பார்வை<br>- நகைச்சுவை உணர்வு - வாழ்வியல் அம்சங்கள்<br>- தத்துவங்கள் | 05<br>- |
| | 4.2 இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுமாற்றை விளக்குவார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • இலக்கியங்கள் குறிப்பிடும் வாழ்வியல் அம்சங்களை இனங்கண்டு பின்பற்றுவார்.<br>- அறக் கருத்துக்கள் - படிப்பினைகள்<br>- விழுமியங்கள் - சமூகப் பார்வை<br>- நகைச்சுவை உணர்வு - வாழ்வியல் அம்சங்கள்<br>- மானுடநேயம் - புரிந்துணர்வு<br>- பொறுப்புணர்வு | 08<br>04<br>65 |

## விடய உள்ளடக்கம்


01. செய்யுட் பகுதி - சிலப்பதிகாரம்: கானல்வரி - **இளங்கோவடிகள்**

02. உரைநடைப் பகுதி (சிறுகதை) தெளிவு - **ஜனாப்.மு.பஷீர்**

03. உரைநடைப் பகுதி - காலந்தோறும் அகம்

1. சங்க காலம்
   குறுந்தொகை - **கபிலர்**
2. சங்கமருவிய காலம்
   கார் நாற்பது - **மதுரைக் கண்ணங் கூத்தனார்**
3. பல்லவர் காலம்
   நாச்சியார் திருமொழி - **ஆண்டாள்**
4. சோழர் காலம்
   நளவெண்பா - **புகழேந்திப்புலவர்**
5. நாயக்கர் காலம்
   தனிப்பாடல் திரட்டு - **காளமேகப்புலவர்**

04. உரைநடைப் பகுதி (கட்டுரை) - புகழ்வேட்டை - **அ.ச. ஞானசம்பந்தன்**

05. செய்யுட் பகுதி (கவிதை) - யேசு கிறிஸ்து - **மகாகவி பாரதியார்**

06. உரைநடைப் பகுதி (கட்டுரை) - மின்மினிகளால் ஒரு தோரணம்
**பாட நூல் எழுத்தாளர் குழு**

07. உரைநடைப் பகுதி (சிறுகதை) - தீவுமனிதன் - **பார்த்திபன்**

08. செய்யுட் பகுதி - தற்காலக் கவிதை:

அ. நாளைய புரட்சி
**பிரமிள் (தர்மலிங்கம் சிவராமலிங்கம்)**

ஆ. இருப்பு - **திருமாவளவன்**

இ. தூர் - **நா.முத்துக்குமார்**

ஈ. ஒரு கதை- **கிஷ்வர் நஹீத்**
(தமிழாக்கம்: எஸ்.வீ.ராஜதுரை)

09. உரைநடைப் பகுதி (கட்டுரை) - பெருமரமாகிப் போனதொரு வாழ்வு
(பாலுமகேந்திரா பற்றியது)- **அஜயன் பாலா**

10. செய்யுட் பகுதி - மெல்லிசைப் பாடல்:

அ. ஓ…வண்டிக்காரா… - **நீலாவணன்**

ஆ. அழகான ஒரு சோடிக்கண்கள்
**பஸீல் காரியப்பர்**

11. உரைநடைப் பகுதி (நாடகம்) - நவீன நாடகம்: வஞ்சியர் காண்டம்
**பிரளயன்** (சண்முகசுந்தரம் சந்திரசேகரன்)

# கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல்

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பக். |
| --- | --- | --- | --- | --- |
| | | | **முதலாந் தவணை** | |
| 01. | 1.0 | 1.2 | செய்யுட் பகுதி - கானல்வரி | 03 |
| 02. | 2.0 | 2.2 | உரைநடைப் பகுதி (சிறுகதை) - தெளிவு | 05 |
| 03. | 4.0 | 4.2 | உரைநடைப் பகுதி - காலந்தோறும் அகம் | 07 |
| 04. | 1.0 | 1.1 | உரைநடைப் பகுதி (கட்டுரை) - புகழ்வேட்டை | 11 |
| | | | **இரண்டாம் தவணை** | |
| 01. | 2.0 | 2.1 | செய்யுட் பகுதி (கவிதை) - பாரதியார் கவிதை | 14 |
| 02. | 1.0 | 1.3 | உரைநடைப் பகுதி (கட்டுரை) - மின்மினிகளால் ஒரு தோரணம் | 16 |
| 03. | 1.0 | 1.4 | உரைநடைப் பகுதி (சிறுகதை) - தீவு மனிதன் | 18 |
| 04. | 3.0 | 3.2 | செய்யுட் பகுதி - தற்காலக் கவிதை: | |
| | | | அ. நாளைய புரட்சி | 20 |
| | | | ஆ. இருப்பு, தூர் | 21 |
| | | | இ. ஒரு கதை | 23 |
| | | | **மூன்றாந் தவணை** | |
| 01. | 4.0 | 4.1 | உரைநடைப் பகுதி (கட்டுரை) - பெருமரமாகிப் போனதொரு வாழ்வு | 26 |
| 02. | 4.0 | 4.2 | செய்யுட் பகுதி - மெல்லிசைப் பாடல்: | |
| | | | அ. ஓ...வண்டிக்காரா... | 28 |
| | | | ஆ. அழகான ஒரு சோடிக்கண்கள் | 30 |
| 03. | 3.0 | 3.1 | உரைநடைப் பகுதி (நாடகம்) - நவீன நாடகம்: வஞ்சியர் காண்டம் | 32 |

## முதலாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | | பாட வேளை | பக். |
|---|---|---|---|---|---|---|
| 01. | 1.0 | 1.2 | செய்யுட் பகுதி - | கானல்வரி | 06 | 03 |
| 02. | 2.0 | 2.2 | உரைநடைப் பகுதி (சிறுகதை) - | தெளிவு | 04 | 05 |
| 03. | 4.0 | 4.2 | உரைநடைப் பகுதி - | காலந்தோறும் அகம் | 08 | 07 |
| 04. | 1.0 | 1.1 | உரைநடைப் பகுதி - (கட்டுரை) | புகழ்வேட்டை | 04 | 11 |
| | | | | மொத்தம் | 22 | |

**தேர்ச்சி 1.0** : இலக்கியங்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.2 : படைப்புக்களை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்**: சிலப்பதிகாரம்: கானல்வரி
1. கோவலன் காவிரியை நோக்கிப் பாடியவை
2. மாதவி காவிரியை நோக்கிப் பாடியவை

**பாடவேளை**: 06

## கற்றற் பேறுகள்:

- சிலப்பதிகார காவியம் பற்றி அறிந்து கூறுவார்.
- செய்யுள்களைச் சந்திபிரித்து, கொண்டுகூட்டி வாசிப்பார்.
- தரப்பட்ட செய்யுட் பகுதியை நயந்து வாசிப்பார்.
- கானல்வரி பற்றியும் இப்பாடல்கள் பாடப்பட்ட சந்தர்ப்பம் பற்றியும் விளக்கமளிப்பார்.
- இச் செய்யுட்கள் பாடப்பட்ட காரணங்களை இனங்கண்டு முன்வைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- சிலப்பதிகார காப்பியம் பற்றியும் அதன் உள்ளடக்கம் பற்றியும் கலந்துரையாடி விளக்கமளித்தல்.
- கானல்வரி பாடப்பட்ட சந்தர்ப்பத்தை விளக்குதல்.
- செய்யுட்களைச் சந்திபிரித்து, கொண்டுகூட்டி வாசிக்கச் செய்தல்.
- செய்யுட்களின் பொருளை விளக்குதல்.
- செய்யுட்களின் பொருளைச் சொந்த மொழிநடையில் எழுதச் செய்தல்.
- செய்யுட்களில் பயின்றுள்ள அணிகளை நயந்து, அவை பற்றி விளக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

1. **சிலப்பதிகாரம் பற்றிய குறிப்புகள்**
   - சங்கமருவிய கால அற இலக்கியம்.
   - ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று.
   - இளங்கோ அடிகளால் பாடப்பட்டது.
     (இவர் சேரலாதன் மகன், செங்குட்டுவனின் தம்பி)
   - சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் கொண்டது.
     புகார்க் காண்டம் - பத்துக் காதைகள்
     மதுரைக் காண்டம் - பதின்மூன்று காதைகள்
     வஞ்சிக் காண்டம் - ஏழு காதைகள்
2. தரப்பட்ட செய்யுள்கள் புகார்க் காண்டத்தில் கானல் வரிக் காதையில் ஆற்றுவரியில் வருகின்றன.
3. சென்னி - சோழன் - கரிகாலன்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல், சிலப்பதிகாரம்
- மேற்றலை எறியி (OHP)
- டிமைன் தாள்கள், எழுதுகருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- செய்யுள்களைச் சந்தி பிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிப்பார்.
- செய்யுள்களின் பொருளை தற்கால உரைநடையில் எழுதுவார்.
- செய்யுள்கள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தினை எடுத்துக் கூறுவார்.
- செய்யுள்களை நயந்து எழுதுவார்.
- இச்செய்யுள்கள் பாடப்பட்ட நோக்கங்களை விளக்கிக் கூறுவார்.

**தேர்ச்சி 2.0** : இலக்கியங்களைக் கற்று, மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : பாடப் பகுதியினூடாகப் பெற்ற மொழியாற்றலைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்:** சிறுகதை: தெளிவு

**பாடவேளை:** 04

### கற்றற் பேறுகள்:

- ஏற்கெனவே அறிந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, சிறுகதை ஒன்றின் அமைப்பு, அதன் பண்புகள் பற்றிக் கூறுவார்.
- சிறுகதையில் காணப்படும் பிரதேச வழக்கினை இனங்கண்டு கூறுவார்.
- சிறுகதையின் பாத்திரங்கள், கதைக்களம் பற்றி எடுத்துக் கூறுவார்.
- பாத்திரங்களின் மனவுணர்வுகள், குணவியல்புகள் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.
- மரபுரீதியான கதை கூறலில் இருந்து, சிறுகதை எவ்வகையில் வேறுபடுகிறது என்பதைத் தெளிவுபடுத்துவார்.
- கதைக் கருவை வளர்க்க, கதாசிரியர் கையாண்ட உத்தி பற்றி தெளிவுபடுத்துவார்.
- சிறுகதை ஊடாகப் பெற்ற மொழியாற்றலைத் தமது ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- சிறுகதை ஒன்றை எழுதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- சிறுகதை ஒன்றின் அமைப்பு, அதன் பண்பு பற்றி ஏற்கெனவே கற்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- இச்சிறுகதையின் கதைக்களம், பாத்திர வார்ப்பு பற்றிய விடயங்களை ஆதாரபூர்வமாக முன்வைக்கச் செய்தல்.
- சிறுகதையில் வரும் பிரதேச வழக்குச் சொற்களை இனங்கண்டு, பட்டியற்படுத்தச் செய்தல்.
- மாணவரைத் தனித்தனியாக சிறுகதையை வாசிக்கச் செய்து, அதில் வரும் பாத்திரங்கள், பாத்திரங்களின் மனவுணர்வுகள், குணாம்சங்கள், அப்பாத்திரங்களின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடச் செய்தல்.
- தலைப்பின் பொருத்தப்பாடு பற்றிய கருத்துக்களை வழங்கச் செய்தல்.
- சிறுகதையில் இடம்பெறும் அணிகளை இனங்கண்டு கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- சிறுகதையாசிரியர் மு.பஷீர் பற்றிய தகவல்களையும் அவரது ஆக்கங்களையும் தேடியறிதல்.
- பின்வரும் அருஞ்சொற்களின் பொருளைத் தேடியறிதல்:

  அவசரக் குடுக்கை
  பர்தா
  யதார்த்தம்

ஜனித்தல்
முஹப்பத்
பஹீலன்
லுஹர்
லிகிதர்
வர்ஷிப்பு
மவுத்து
ரியால்
கல்பு
ஈக்கியா
அமானிதம்

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாட நூல், சிறுகதை - தெளிவு
- அகராதி
- எழுதுதாள், எழுதுகருவிகள்
- மேற்றலை எறியி (OHP)

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- சிறுகதையின் கரு, களம் பற்றி விளக்கமளிப்பார்.
- சிறுகதையில் வரும் பாத்திரங்களைப் பட்டியற்படுத்தி, அவற்றின் குணப்பண்புகளை விபரித்து எழுதுவார்.
- சிறுகதையில் வரும் பிரதேச வழக்குச் சொற்களை எடுத்துக்காட்டி, பொருள் கூறுவார்.
- சிறுகதை ஊடாகப் பெற்ற மொழியாற்றலைத் தமது ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- தாமும் இவ்வாறான சிறுகதையை எழுதுவார்.

**தேர்ச்சி** 4.0: இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 4.2: இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புறுமாற்றினை விளக்குவார்.

**விடய உள்ளடக்கம்**: அகநோக்கு - காலந்தோறும் அகம்

**பாடவேளை**: 08

**கற்றற் பேறுகள்:**

- தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலகட்டங்கள் பற்றி அறிந்து கூறுவார்.
- ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த காதல் பற்றிக் கூறப்படும் இலக்கியங்களை விபரித்துக் கூறுவார்.
- காலந்தோறும் எழுந்த இலக்கியங்களில் காதல் உணர்வு வெளிப்படுத்தப்படுமாற்றினை நயந்து கூறுவார்.
- ஒவ்வொரு காலகட்டப் படைப்புகளின் மொழிநடை பற்றி எடுத்துரைப்பார்.
- செய்யுட்களின் கருத்தினைத் தமது மொழிநடையில் தெளிவாக எழுதுவார்.
- காதல் உணர்வினை வெளிப்படுத்தும் தற்காலப் பாடல்களுடன், குறித்த பாடல்களை ஒப்பு நோக்கிக் கூறுவார்.
- காலந்தோறும் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிஞர்களது வெளிப்பாட்டுத் திறனை, ஒப்பிட்டு விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- தமிழ் இலக்கிய வரலாற்று காலகட்டங்கள், அவ்வக் காலத்துச் சமூகப் பின்னணி பற்றிக் கலந்துரையாடுதல்.
- ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த இலக்கியங்கள் பற்றி விபரித்தல். (பொருளறிவு, உணர்த்தும் முறை, உத்திகள்.)
- சங்ககாலத்தின் இலக்கியப் பண்பாகத் துலங்கியவை அகம் - புறம் என்பனவாகும். ஏனைய காலகட்டங்களில் வேறு சிறப்புப் பண்புகள் மேலோங்கிய போதிலும், அங்கு அகம் - புறம் எவ்வாறு வெளிப்பட்டதென்பதை உணர்த்தல்.
- காதல் உணர்வினை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் பற்றி விளக்குதல்.
- அகவுணர்வானது ஆண், பெண் நிலைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றினை விளக்குதல்.
- பல்லவர் கால ஆண்டாள் பாடல்களில் உலகியற் காதலினூடாக, தெய்வீகக் காதல் வெளிப்படுத்தப்படும் முறைமையினை விபரித்தல்.
- மாணவர்களைத் தனித்தனியாக முதன்மைப்படுத்தி குறித்த பாடல்களைச் சந்திபிரித்து, கொண்டுகூட்டி வாசிக்கச் செய்தல்; பொருளை விளக்கிக் கூறச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, ஒவ்வொரு கால கட்டத்திற்குமான செய்யுள்களை வழங்கி, அவற்றின் பொருள், அவை கூறும் காதல் உணர்வுநிலை, வாழ்வியல் அம்சங்கள் என்பவற்றை இனங்கண்டு கலந்துரையாடச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய அறிமுகம்
- சங்க காலம்
- சங்கமருவிய காலம்
- பல்லவர் காலம்
- சோழர் காலம்
- நாயக்கர் காலம்
- ஐரோப்பியர் காலம் (போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம்)
- தற்காலம்

### முதலாம் பாடல்

**சங்க கால இலக்கியங்கள் பற்றிய குறிப்புகள்:**

- எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்கள் மேற்கணக்கு நூல்கள் எனப்படும்.
  அவை:
  - அகம் சார்ந்தவை
  - புறம் சார்ந்தவை
- எட்டுத் தொகை நூல்களில் அகம் சார்ந்த நூல்களுள் குறுந்தொகையும் ஒன்றாகும்.
  இப் பாடலைப் பாடியவர் - கபிலர்
  திணை - குறிஞ்சி
  தலைவன் கூற்றாக அமைந்த பாடல்

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| பூக்குற்று | - | பூவைக் கொய்து |
| தொடலை | - | மாலை |
| தைஇ | - | தொடுத்து |
| கடியும் | - | விரட்டும் |
| உயிர்த்து | - | பெருமூச்சு விட்டு |

### இரண்டாம் பாடல்

**சங்கமருவிய கால இலக்கியங்கள் பற்றிய குறிப்புகள்:**

- இக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படும்.
  - அகம் சார்ந்தவை
  - புறம் சார்ந்தவை
  - அறம் சார்ந்தவை
- கார்நாற்பது - அகப்பொருள் பற்றியது.
  தலைவன் பாங்கனுக்குக் கூறியது.

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| சிரல் | - | சிக்சிலிக் குருவி |
| வனப்பு | - | அழகு |
| நிரல் | - | வரிசை |
| தகைந்தன | - | அரும்பின |
| சீர்த்தக்க | - | சிறந்த |
| சில் | - | சிலவாகிய |

## மூன்றாம் பாடல்

**பல்லவர் கால இலக்கியங்கள் பற்றிய குறிப்புகள்:**

- பக்தி சார்ந்தவை
- பக்தி சாராதவை

- பல்லவர்கால பக்தி இலக்கியங்களில் நாச்சியார் திருமொழியும் ஒன்றாகும். தலைவி பாங்கிக்குக் கூறியது.
- ஆண்டாள் தன் காதலை வெளிப்படுத்தும் பாடல்கள். கைக்கிளை - ஒருதலைக் காதல்.
- பெண்ணின் நிலையில் நின்று, காதல் வெளிப்படுத்தப்படுகின்றது.
- நடைமுறை வாழ்வியல் அம்சங்களுடன் தொடர்புபடுத்தி, சம்பிரதாய முறைப்படி, தனக்கும் நாராயணனுக்கும் திருமணம் நடைபெறுவதாகக் கண்ட கனவினைக் கூறுவதன் மூலம் ஆண்டாள், நாரயணன் மேல் கொண்ட காதலை வெளிப்படுத்துகின்றாள்.
- அகவிதிக்கு புறம்பான மரபாக இது காணப்படுகின்றது.

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| முத்துடைத் தாமம் | - | முத்துக்களாலான மாலை |
| நிரை தாழ்ந்த | - | வரிசை வரிசையாகத் தொங்கவிடப்பட்ட மாலை |

## நான்காம் பாடல்

**சோழர் கால இலக்கியங்களுள் ஒன்றான நளவெண்பா பற்றிய குறிப்புகள்:**

- காதல் வயப்பட்ட பெண்ணின் மனவுணர்வு நிலையைப் புகழேந்திப்புலவர் எடுத்துரைக்கின்றார்.

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| பிள்ளை மீன் | - | மீன்குஞ்சு |
| நிரை தாழ்ந்த | - | வரிசை வரிசையாகத் தொங்கவிடப்பட்ட மாலை |

### ஐந்தாம் பாடல்

**நாயக்கர் கால இலக்கியங்களுள் ஒன்றான காளமேகப் புலவரின் செய்யுள்கள் பற்றிய குறிப்புகள்:**

- தலைவி ஏகாம்பரநாதரிடம் கொண்ட காதலை, தன் தோழிமார்களுக்கு கூறுதல்.
- கனவிலே வந்த அவன் கை பற்றியது, மறைந்து போனது பற்றி எடுத்துக் கூறுதல்.
- **செய்யுள்களில் கையாளப்படும் சிலேடைகள்.**

  **ஆற்றியே கஞ்சி குடி**

  - கோபத்தை ஆற்றி (தணித்து), காஞ்சியில் குடியிருப்பவன்.

  - கஞ்சியை ஆற்றிக் குடி

  **களித்தின்று போ**

  - இன்று களித்துப் போ - என்னுடன் இன்று மகிழ்வாக இருந்துவிட்டுப் போ.

  - களித்தின்று போ - களியை உண்டுவிட்டுப் போ.

- **அரும்பத விளக்கம்**

  விடாய் என்றேன் - விடு என்றேன்

  வஞ்சியர் - வஞ்சிக் கொடி போன்ற இடையுடைய பெண்கள்

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- அகராதி
- எழுது தாள், எழுது கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடல்களைச் சந்திபிரித்தும் கொண்டுகூட்டிம் வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைச் சொந்த மொழிநடையில் எழுதுவார்.
- பாடலினூடாக வெளிப்படுத்தப்படும் உணர்வினை விபரித்துக் கூறுவார்.
- காலந்தோறும் இலக்கியங்கள் கூறும் கருத்துக்களில் காதல் உணர்வு வெளிப்படுத்தும் முறைமையினை விபரிப்பார்.
- பழந்தமிழ்ச் செய்யுட்களை, தற்கால பாடல்களுடன் ஒப்பு நோக்கிக் கூறுவார்.

**தேர்ச்சி 1.0** : இலக்கியங்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : பாடப் பகுதிகளை ஈடுபாட்டுடனும் குரல் ஏற்ற, இறக்கத்துடனும் வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: கட்டுரை: புகழ்வேட்டை

**பாடவேளை**: 04

**கற்றற் பேறுகள்:**

- பாடப் பகுதியினைக் கருத்தூன்றி வாசிப்பார்.
- கட்டுரையின் பொருளை விளங்கி வாசிப்பார்.
- கட்டுரையாசிரியர் பற்றி விபரிப்பார்.
- கட்டுரையின் மையக்கருத்தை இனங்கண்டு எழுதுவார்.
- துணைக் கருத்துக்களை விபரிப்பார்.
- கட்டுரையில் இடம்பெறும் செய்யுள்களில் உள்ள சிறப்புக்களை விளக்கி எழுதுவார்.
- புகழ்வேட்டை - பற்றிய ஆசிரியரது கருத்தை எழுதுவார்.
- பாடப் பகுதியினூடாகப் பெற்ற கருத்துக்களை நயந்து வெளிப்படுத்துவார்.
- புகழ்வேட்டை என்னும் கட்டுரையிலிருந்து, தாம் பெற்றுக்கொண்ட படிப்பினைகளைப் பட்டியற்படுத்தி எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கட்டுரை பற்றியும் கட்டுரையாசிரியர் பற்றியும் விளக்கமளித்தல்.
- குழுநிலையில் மாணவரை அமரச் செய்து, கட்டுரையைக் கருத்தூன்றி வாசிக்கச் செய்தல்.
- தமக்குள் கலந்துரையாடி மையக்கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு எழுத வழிபடுத்தல்.
- கட்டுரையில் இடம்பெற்றுள்ள செய்யுள்களைக் கொண்டுகூட்டி வாசிக்க வழிபடுத்தல்.
- கட்டுரையில் உள்ள செய்யுட்களின் பொருளைத் தெளிவாக எழுத ஊக்கமளித்தல்.
- அகராதியின் துணைகொண்டு அரும்பதங்களின் பொருள்களைக் கூறச் செய்தல் / எழுதச் செய்தல்.
- கட்டுரையை வாசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய பண்புகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- கட்டுரை பற்றிய, குறிப்புகளை எடுக்க வழிப்படுத்தல்.
- கட்டுரையிலிருந்து எடுத்த கருத்துக்களைத் தொகுத்து எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- கட்டுரை ஆசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் பற்றிய விடயங்களைத் தேடியறிதல்.
- கட்டுரையில் காணப்படும் அருஞ் சொற்களின் பொருளைத் தேடியறிதல்.
- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| உழை இருப்போர் | - | கூட இருப்போர் |
| பூசல் | - | சண்டை, போர் |
| வெறி | - | போதை |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- காகிதாதிகள்
- அகராதி
- புறநானூறு, மதுரைக் காஞ்சி, திருக்குறள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- மையக் கருத்தினை இனங்கண்டு எழுதுவார்.
- கட்டுரையில் இடம்பெறும் செய்யுட்களைக் கொண்டுகூட்டி வாசிப்பார்.
- கட்டுரையில் வெளிப்படும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுவார்.
- கட்டுரையில் இடம்பெறும் செய்யுள் அடிகளின் சிறப்புக்களை விளக்கிக் கூறுவார்.
- கட்டுரையின் தலைப்பிற்கும் உள்ளடக்கத்திற்கும் இடையிலான பொருத்தப்பாடு தொடர்பாகத் தமது கருத்துக்களை முன்வைப்பார்.
- சிறந்த விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற மனப்பாங்குடன் செயற்படுவார்.

## இரண்டாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக். |
|---|---|---|---|---|---|
| 01. | 2.0 | 2.1 | செய்யுட் பகுதி - பாரதியார் கவிதை (கவிதை) | 04 | 14 |
| 02. | 1.0 | 1.3 | உரைநடைப் பகுதி - மின்மினிகளால் ஒரு தோரணம் (கட்டுரை) | 06 | 16 |
| 03. | 1.0 | 1.4 | உரைநடைப் பகுதி - தீவு மனிதன் (சிறுகதை) | 07 | 18 |
| 04. | 3.0 | 3.2 | செய்யுட் பகுதி - தற்காலக் கவிதை:<br>அ. நாளைய புரட்சி<br>ஆ. இருப்பு, தூர்<br>இ. ஒரு கதை | 07 | 20 |
| | | | மொத்தம் | 24 | |

**தேர்ச்சி 2.0** : இலக்கியங்களைக் கற்று மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.1 : படைப்புக்களில் வெளிப்படும் மொழிப்பிரயோகங்களை நன்கு கிரகித்து, விடையளிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : பாரதியார் கவிதை: யேசு கிறிஸ்து

**பாடவேளை** : 04

### கற்றற் பேறுகள்:

- கவிதையைப் பதம்பிரித்து வாசிப்பார்.
- கவிதையின் பொருளைத் தமது மொழிநடையில் கூறுவார்.
- கவிதையில் நயந்த பகுதிகளை முன்வைப்பார்.
- கவிதையில் இடம்பெற்றுள்ள அணிகளை இனங்கண்டு எழுதுவார்.
- பாரதியாரின் படைப்பாற்றல் திறனை விமர்சனம் செய்வார்.
- கவிதையில் வெளிப்படும் மொழிப்பிரயோகத்தைக் கிரகித்து, சரியாக விடையளிப்பார்.
- கவிதையில் தாம் நயந்த பாடல் வரியினையும் அதற்கான காரணத்தையும் எழுதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பாரதியார் கவிதைகள் பற்றிக் கலந்துரையாடல்.
- கவிதையைப் பதம்பிரித்து வாசிக்கச் செய்தல்.
- அருஞ்சொற்களுக்கான பொருளைக் கூறச் செய்தல்.
- மாணவர்களைகளுக்குச் செயற்பாடுகளை வழங்கி, குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி, விடைகளை முன்வைக்கச் செய்தல்.
- இக்கவிதையூடாக, பாரதியார் முன்வைக்கும் கருத்துக்களை விளக்குதல்.
- அணிகள் பற்றியும் நயந்த பகுதிகள் பற்றியும் விளக்குதல்.
- கவிதையின் மொழிப்பிரயோகம் பற்றி விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- பாரதியார் பற்றிய விளக்கம்.
  - அவரது சமூக, சமய நோக்குகள்
  - கவிதைகளின் தன்மைகள்
  - அவரது கவிதைகளில் காணப்படும் சிறப்புக்கள்
- யேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் பற்றிய விளக்கம்
- அவர் உயிர்த்து, மரியாள் மக்தலேனாவுக்கு கூறிய செய்தி பற்றிய விளக்கம் (யேசு கிறிஸ்துவின் தாயான மேரி மரியாள் வேறு; இங்கு குறிப்பிடப்படும் மரியாள் மக்தலேனா வேறு.)


### தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாரதியார் கவிதை
- மேற்றலை எறியி (OHP)
- பின்னிணைப்பு - 1

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாரதியார் கவிதைகளைப் பற்றி விளக்கிக் கூறுவார்.
- 'யேசு கிறிஸ்து' என்ற கவிதையில் வெளிப்படுத்தப்படும் செய்தியைக் குறிப்பிடுவார்.
- இக்கவிதையில் உள்ள அணிகள் பற்றியும் அவற்றின் விளக்கத்தையும் கூறுவார்.

# பின்னிணைப்பு - 1



(11.12.1882 - 11.09.1921)

சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் இலட்சுமி அம்மையாருக்கும் புதல்வனாகப் பிறந்தார். தனது பன்னிரண்டாவது வயதுக்குள்ளாகவே, எட்டயபுரம் சமஸ்தானத்து அறிஞர்களால், 'பாரதி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தமிழ்ப் புலவர்கள், புரவலர்களைப் புகழ்ந்தும் காதல் முதலான கற்பனாதீத விடயங்களை வியந்தும் கற்றோர்களையே மனங்கொண்டும் கவிபுனைந்து வந்த காலத்தில் எளிய பதங்கள், எளிய நடை, எளிய சந்தம், பொது சனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை உடைய கவிதைகளால் தமிழிலக்கியப் போக்கை மடைமாற்றம் செய்தவர்.

மக்கள் மனதில் தேசிய உணர்வினையும் தமிழ்ப் பற்றினையும் இறை நம்பிக்கையையும் சாதிபேதம், பெண்ணடிமைத்தனம் முதலானவற்றுக்கு எதிரான சமுதாய நீதியையும் ஊட்டுவனவாக பாரதியாரின் கவிதைகள் அமைந்தன. தமிழ் மரபிலே காலூன்றி ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலான பிற இலக்கிய மரபுகளில் உள்ள நல்லவற்றையும் உள்வாங்கியனவாய் அமைந்த அவரது கவிதைகள், அவரைப் புதுமைக் கவிஞனாகக் காட்டிநின்றன. அவரது கவிதைகள், தேசிய உணர்ச்சியினை ஊட்டிய வகையில் தேசீய கவியாகவும் தமிழிலக்கிய வரலாற்றில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்திய வகையால் அவரை, மகாகவியாகவும் திகழச் செய்தன. அவரியற்றிய 'வசன கவிதைகள்' தமிழின் புதுக்கவிதைத் துறைக்கு முன்னோடியாயின.

கவிதைத் துறையில் மாத்திரமன்றி சிறுகதை, கட்டுரை முதலான வசன இலக்கியத் துறையிலும் அவர் ஆற்றலோடு ஈடுபட்டார். தமிழ் இதழியல் துறையின் முன்னோடிகளுள் ஒருவர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு. எல்லாவற்றையும்விட புரட்சிகரமான கருத்துக்களைச் சொன்னவர் என்பதோடு, புரட்சிகரமான வாழ்க்கை வாழ்ந்தார் என்பதே அவருக்குரிய தலையாய பெருமையாகும்.

**தேர்ச்சி** 1.0 : இலக்கியங்களை நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.3 : படைப்புக்கள் மூலமாக சமூகத்தையும் தான் வாழும் உலகத்தையும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** கட்டுரை:
''மின் மினிகளால் ஒரு தோரணம்''

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்:**

- கட்டுரையின் பொருள் விளக்கத்தை வாசித்து அறிவார்.
- வழக்கிலுள்ள கவிதைக்கும் ஹைக்கூ கவிதைக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு கூறுவார்.
- ஹைக்கூ கவிதை வடிவத்தினை விளக்கி, அதன் பொருளை விளங்கிக் கொள்ளும் முறையினை விளங்கிக் கூறுவார்.
- மாணவர்கள் தாமும் ஹைக்கூ கவிதை எழுதுவதில் பயிற்சி பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- காலந்தோறும் தமிழில் வழங்கிவரும் கவிதைக்கும் ஹைக்கூ கவிதைக்கும் இடையிலான வேறுபாடுகளை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுதல்.
- ஹைக்கூ கவிதையின் அமைப்பினை விளக்கி, அவற்றை மாணவர்களை இரசிக்கச் செய்தல்.
- கட்டுரையில் தரப்பட்டுள்ள விடயங்களை வாசிக்கச் செய்வதுடன் அக்கவிதைகளை இரசிக்க வழிப்படுத்தல்.
- தாம் வாழும் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கவிதைகளை, மாணவர் குழுக்களாகவும் தனியாகவும் ஆக்க வழிப்படுத்தல்.
- இவ்வாறான வேறு கவிதைகளைத் தேடிப்பெற்று வாசிக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- ஹைக்கூ கவிதை பற்றிய விளக்கம்
- செய்யுள் பற்றிய விளக்கம்
- நவீன கவிதை பற்றிய விளக்கம்
- புதுக்கவிதை பற்றிய விளக்கம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் - ஹைக்கூ கவிதைகள்
- வலைத்தளத் தேடல்கள்
- எழுது தாள், எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஹைக்கூ கவிதை என்பதன் விளக்கத்தையும் அது ஏனைய கவிதை வடிவங் - களிலிருந்து வேறுபடும் விதத்தினையும் விளக்குவார்.
- ஹைக்கூ கவிதையின் பொருளை விளக்கி எழுதுவார்.
- ஹைக்கூ வடிவக் கவிதைகளை இரசனையுடன் வாசிப்பார்.
- தமது உணர்வுகளைக் ஹைக்கூ கவிதையாகப் படைப்பார்.

**தேர்ச்சி 1.0 :** இலக்கியங்களை நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4 :** விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** சிறுகதை: ''தீவு மனிதன்''

**பாடவேளை :** 07

**கற்றற் பேறுகள்:**

- சிறுகதையை நயந்து வாசிப்பார்.
- ''தீவு மனிதன்'' என்ற சிறுகதையின் கருப்பொருள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- கதைக்கருவுக்கும் கதையோட்டத்திற்கும் பாத்திரங்களுக்கும் இடையிலான இயைபு பற்றி விபரிப்பார்.
- கதை பற்றிய கருத்துக்களை உள்வாங்கி தமது விமர்சனத்தைக் கூறுவார்.
- சிறுகதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணாம்சங்களை விளக்கி எழுதுவார்.
- சிறுகதையில் இடம்பெறும் பிரதான பாத்திரத்தின் மனப்போராட்டம், கதையை வளர்த்துச் செல்ல எவ்வகையில் உதவுகின்றது என்பதை விளக்கிக் கூறுவார்.
- சிறுகதையின் அமைப்பு, அதன் மொழிநடை பற்றி எடுத்துரைப்பார்.
- வேறு ஆக்கங்களை நயந்து வாசிப்பதன் ஊடாக, தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.
- சிறுகதை தரும் படிப்பினையை ஏற்று நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறுகதை ஆசிரியர், சிறுகதையின் அமைப்பு, அதன் மொழிநடை பற்றி கலந்துரையாடுதல்.
- ''தீவு மனிதன்'' என்ற சிறுகதையினை ஒவ்வொரு மாணவரையும் வாசிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, கதையின் கருப்பொருள், நயந்த பகுதி, கதாபாத்திரங்களின் பண்பு, மொழிநடை முதலிய விடயங்களைக் கலந்துரையாடச் செய்தல்.
- கதையின் நோக்கம் பற்றி எடுத்துக் கூறச் செய்தல்.
- கலந்துரையாடிய விடயங்களையும் சிறுகதையில் தாம் நயந்த பகுதியையும் எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- ''தீவு மனிதன்'' ஆசிரியர் பற்றிய விபரம்
  - பார்த்திபன்
  - தனிமைத் துயர்
  - சுயநல வாழ்க்கை
  - கூடிவாழ்தல் குறித்த விளைவு
- சிறுகதையின் அமைப்பு
  - குறைந்தளவிலான கதாபாத்திரங்கள்
  - கதைக்கருவும் கதைக்களமும்
  - எளிமையான மொழி நடை
  - யதார்த்தப் பண்பு
- அரும்பதங்களை இனங்கண்டு விளக்கம் கூறுதல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் - தீவு மனிதன் சிறுகதை
- அகராதி
- எழுதுதாள், எழுதுகருவிகள்
- ஒலிநாடா அல்லது இறுவட்டு

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறுகதையைக் கருத்தூன்றி நயந்து வாசிப்பார்.
- கதைக்கரு, தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி எடுத்துரைப்பார்.
- கதாபாத்திரங்களின் குண இயல்புகளை விபரிப்பார்.
- கதையின் படிப்பினைகளைக் கலந்துரையாடி, அவற்றை முன்வைப்பார்.
- கதை பற்றி விமர்சித்துக் கூறுவார்.
- மனதைக் கவரும் வகையிலான சிறுகதைகளைப் படைப்பார்.

**தேர்ச்சி 3.0 :** பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** படைப்புக்கள் குறித்துச் சிந்தித்து, கலந்துரையாடி, தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் கற்பனைத் திறனுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** தற்காலக் கவிதைகள்:
அ. நாளைய புரட்சி

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள்:**

- கவிதையைக் கருத்தூன்றி வாசிப்பார்.
- கவிதையின் தலைப்புகள் வெளிப்படுத்தும் பொருள் பற்றிக் கூறுவார்.
- கவிதையின் மொழிநடை பற்றிக் கூறுவார்.
- கவிதையின் கருப்பொருள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் கற்பனைத் திறனுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.
- தனிச் சொற்கள், தொடர்கள் வெளிப்படுத்தும் கவிதை வீச்சு பற்றி விமர்சிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கவிதைகளைப் பற்றியும் கவிதைகளின் மொழிநடை பற்றியும் கலந்துரையாடல்.
- மாணவர் ஒவ்வொருவரையும் கவிதையை மௌனமாக வாசிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, கவிதையின் கருப்பொருள், நயந்த பகுதி, கவிதைப்போக்கு என்பவற்றைக் கலந்துரையாடி முன்வைக்கச் செய்தல்.
- இது போன்ற வேறு கவிதையை எழுதுவதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- நாளைய புரட்சி கவிதை ஆசிரியர் பிரமிள் பற்றிய விபரம்:

  **இயற்பெயர்:** தர்மலிங்கம் சிவராமலிங்கம்

  **புனைபெயர்கள்:** தர்மு சிவராம், பிரமிள்

  - திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழகத்தை வாழிடமாகக் கொண்டவர்.
  - சிறந்த படைப்பாளியும் விமர்சகருமாக விளங்கியவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- காகிதாதிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கவிதையைக் கருத்தூன்றி வாசித்து, கிரகித்துத் துலங்குவார்.
- கவிதையின் தலைப்பு, கருப்பொருள், மொழி நடை பற்றி எழுதுவார்.
- இது போன்ற ஆக்கங்களைத் தேடி வாசிப்பார்.
- கவிதையின் கடின பதங்கள், நயங்கள் என்பவற்றை எடுத்து விளக்குவார்.
- தாமும் இது போன்ற ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி 3.0 :** பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** படைப்புக்கள் குறித்துச் சிந்தித்து, கலந்துரையாடி, தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் கற்பனைத் திறனுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** தற்காலக் கவிதைகள்:
ஆ. இருப்பு, தூர்

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள்:**

- கவிதைகளை கருத்தூன்றி வாசித்துக் கிரகிப்பார்.
- கவிதையின் கடின பதங்களுக்கு விளக்கம் கூறுவார்.
- கவிதையின் குறியீட்டம்சங்கள், நயங்கள் என்பவற்றை எடுத்து விளக்குவார்.
- ஒவ்வொரு கவிதையினதும் தலைப்பு, மையக்கருத்து பற்றிக் கலந்துரையாடுவார்.
- இது போன்ற ஆக்கங்களைத் தேடி வாசிப்பார்.
- தாமும் இது போன்ற, வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- தற்காலக் கவிதைகளின் போக்குகள், கருப்பொருட்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல்.
- மாணவர் ஒவ்வொருவரையும் கவிதைகளை மௌனமாக வாசிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, கவிதையின் கருப்பொருள், நயங்கள், குறியீடுகள் என்பவற்றைக் கலந்துரையாடி முன்வைக்கச் செய்தல்.
- மாணவர்கள் நயந்த பகுதிகளையும், அதற்கான காரணங்களையும் கூறச் செய்தல்.
- மாணவர்களை இது போன்ற ஆக்கங்களை படைப்பதற்கு வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- ''இருப்பு'' கவிதை ஆசிரியர் திருமாவளவன் பற்றிய விபரம்.
  ''இருப்பு'' கவிதை பற்றிய விளக்கம்:
  - குறுகிய நீர்ப்பரப்பில் வாழும் மீன்குஞ்சின் சிறைவாழ்வு - வசதிகள் கிடைத்தும் மகிழ்ச்சியற்ற துயரநிலை.
- **அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| மின் வெளிச்சம் | - | மின்சார விளக்கு வெளிச்சம் |
| மின் சூடாக்கி | - | மின்சாரத்தினால் வெப்பமேற்றும் சாதனம் |
| கணகணப்பு | - | இளஞ்சூடாக இருத்தல் |

| | | |
|---|---|---|
| பதனிடுதல் | - | கெட்டுப் போகாமல் பாதுகாத்தல் |
| உபசரிப்பு | - | கவனஞ்செலுத்தி தேவைகளை நிறைவேற்றுதல் |
| சொகுசு | - | உல்லாச நிலை |
| துயர் | - | துன்பம் |

- ''தூர்'' கவிதை ஆசிரியர் நா.முத்துக்குமார் பற்றிய விபரம்.
- **அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| தூர் | - | நீருள் மண்டிய மண் முதலிய அழுக்குகள் |
| தூர் வாருதல் | - | சுத்தம் செய்தல் |
| உற்சவம் | - | விழா (மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி) |
| முங்க (முங்குதல்) | - | மூழ்குதல் (நீரில் அமிழ்தல்) |
| அதிசயம் | - | காணாதவை / முதல்முதலாய் அறிபவை |
| கொட்டாங்குச்சி | - | தேங்காய்ச் சிரட்டை |
| கோலி | - | கண்ணாடிக் குண்டுகள் (விளையாட்டுப் பொருள்) |
| துரு | - | கறள் (இரும்பு பழுதடைதல் / துருப்பிடித்தல்) |
| ராட்டினம் | - | நூல் சுற்றும் சக்கரம் |
| வெள்ளி டம்ளர் | - | வெள்ளியினால் செய்யப்பட்ட குவளை |
| கட்டை | - | சிறிய மரத்துண்டு |
| சேறு | - | சகதி, மண் நீரோடு கலந்து கூழான நிலை |
| மனசுக்குள் தூர் எடுத்தல் | - | மனதிலுள்ள அழுக்குகளை அகற்றிச் சுத்தம் செய்தல் |

- ''தூர்'' கவிதை மன அழுக்குகள் நீக்கப்பட வேண்டும் என்பதை விளக்குகிறது.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- கவிதைப் பகுதி - பாட நூல்
- டிமைன் தாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கவிதையைக் கருத்தூன்றி வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.
- கவிதையின் மையக் கருத்து, தலைப்பு பற்றி எடுத்துக் கூறுவார்.
- இது போன்ற ஆக்கங்களைத் தேடி வாசிப்பார்.
- கவிதையின் கடின பதங்களை விளக்குவார்.
- கவிதையிற் காணப்படும் நயத்தை விளக்குவார்.
- தாமும் இது போன்ற ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி 3.0 :** பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** படைப்புக்கள் குறித்துச் சிந்தித்து, கலந்துரையாடி, தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் கற்பனைத் திறனுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** தற்காலக் கவிதை:
இ. ஒரு கதை

**பாடவேளை** : 02

## கற்றற் பேறுகள்:

- கவிஞர் பற்றி அறிந்து கூறுவார்.
- கவிதையைக் கருதூன்றி வாசிப்பார்.
- கவிதையின் மையக்கருத்து, தலைப்பு என்பன பற்றிக் கலந்துரையாடுவார்.
- கவிதையின் மொழிநடை, கடின பதங்கள் என்பவற்றுக்கு விளக்கம் கூறுவார்.
- கவிதையின் நயங்களை எடுத்து விளக்குவார்.
- இது போன்ற வேறு ஆக்கங்களைப் படைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- கவிதை ஆசிரியர் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவர்களை, கவிதையை வாசித்துக் கிரகிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி கவிதையின் தலைப்பு, மையக்கருத்து, நயம் பற்றிக் கலந்துரையாடி விளக்குவதற்கு இடமளித்தல்.
- மாணவர்களை இது போன்ற கவிதைகளைத் தேடி வாசிக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- கவிஞர் கிஷ்வர் நஹீத் பற்றிய குறிப்புகள் :
  **ஒரு கதை** கவிதை பற்றிய விளக்கம்:
  - ஆணாதிக்கம் பேசப்படுகின்றது. திருமணம் எனும் சடங்கின்மூலம் மீண்டும் பெண்ணை ஆண் ஆட்டிப் படைக்கின்றான்.

- **அரும்பதங்கள்**

  ஆடு குதிரை - முன்னும் பின்னும் ஆடக்கூடிய மரத்தால் செய்யப்பட்ட குதிரை
  ஸ்பரிசம் - தொடுகை உணர்வு
  மெச்சிக் கொள்ளுதல் - பாராட்டிக் கொள்ளுதல்
  உருமாறுதல் - உருவம் மாற்றம் அடைதல்
  எஜமான் - ஆள்பவன்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கவிதைப் பகுதி - பாட நூல்
- டிமைன் தாள்கள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கவிதையைக் கருத்தூன்றி வாசித்துக் கிரகித்து துலங்குவார்.
- கவிதையின் மையக் கருத்து, தலைப்பு பற்றி எடுத்துக் கூறுவார்.
- இது போன்ற ஆக்கங்களைத் தேடி வாசிப்பார்.
- கவிதையின் கடின பதங்கள், நயங்கள் என்பவற்றை எடுத்து விளக்குவார்.
- தாமும் இது போன்ற ஆக்கங்களைப் படைப்பார்.

## மூன்றாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாட வேளை | பக். |
|---|---|---|---|---|---|
| 01. | 4.0 | 4.1 | உரைநடைப் பகுதி (கட்டுரை) - பெருமரமாகிப் போனதொரு வாழ்வு | 05 | 26 |
| 02. | 3.0 | 4.2 | செய்யுட் பகுதி - மெல்லிசைப் பாடல்: அ. ஓ...வண்டிக்காரா... ஆ. அழகான ஒரு சோடிக்கண்கள் | 04 | 28 |
| 03. | 2.0 | 3.1 | உரைநடைப் பகுதி (நாடகம்) - நவீன நாடகம்: வஞ்சியர் காண்டம் | 10 | 32 |
| | | | **மொத்தம்** | **19** | |

**தேர்ச்சி 4.0 :** இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.

**விடய உள்ளடக்கம்:** கட்டுரை: ''பெருமரமாகிப் போனதொரு வாழ்வு''

**பாடவேளை :** 05

**கற்றற் பேறுகள்:**

- கட்டுரையினை வாசித்துக் கிரகித்துக் குறிப்பெடுப்பார்.
- கருத்துக்களைத் தெளிவாக அறிந்து கூறுவார்.
- கட்டுரையில் வாசித்த விடயங்களை விமர்சித்து, கருத்துக்களைத் தெளிவாக எழுதுவார்.
- படைப்பாளிகள் பற்றியும் அவர்களது படைப்புகள் பற்றியும் தகவல்களைத் தேடித் தொகுப்பார்.
- படைப்பாளிகள் பற்றியும் அவர்களது படைப்புகள் பற்றியும் விமர்சித்து எழுதுவார்.
- தலைப்புக்கும் உள்ளடக்கத்திற்கும் இடையிலான தொடர்பினை விபரித்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் பார்த்து இரசித்த திரைப்படப் பாடல்கள் பற்றி கேட்டுக் கலந்துரையாடல்.
- தமிழ்த் திரைப்பட ஒளிப்பதிவாளர்கள், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- இயக்குநர் பாலுமகேந்திரா பற்றிய குறிப்புகளைக் கூறி விபரித்தல்.
- கட்டுரையைக் குழு நிலையில் கலந்துரையாடச் செய்து விளக்கமளித்தல்.
- கட்டுரையைத் தனித்தனியாக வாசித்து, குறிப்புகள் எடுக்கச் செய்தல்.
- எடுத்த குறிப்புகக்களைக் குழு நிலையில் தொகுத்து முன்வைத்தல்.
- கடின பதங்களுக்குப் பொருள் விளக்கம் கொடுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- தமிழ்த் திரைப்படங்கள் பற்றிய குறிப்புகள்.
  திரைப்பட இசை, ஒளிப்பதிவு, இயக்கம் பற்றிய விளக்கம்.
- பாலுமகேந்திரா பற்றிய விளக்கக் குறிப்புகள்.
  - மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
  - சென்னை, தமிழ் நாடு, இந்தியாவை வசிப்பிடமாக கொண்டவர்.
  - பிறப்பு - 20.05.1939 இறப்பு - 13.02.2013
  - வேறு பெயர்கள்: மகேந்திரா, பாலு
  - சிறந்த ஒளிப்பதிவாளர்; இயக்குநர்.
  - தமிழ், கன்னடம், மலையாளம் முதலான மொழிகளில் திரைப்படங்களை இயக்கியுள்ளார்.
  - ஒளிப்பதிவு, இயக்கம் என்பவற்றில் யதார்த்த நோக்கினையுடையவராதலின் நவீன உத்திகளைக் கையாண்டவர்.
  - சிறந்த சினிமாப் படங்களுக்கு இந்திய அரசு வழங்கும் தேசிய விருதுகளைப் பலமுறை பெற்றவர்.
- கலைப் படைப்பு: வீடு, சந்தியாராகம்
- குரோசேவா - ஜப்பானிய மொழித் திரைப்பட இயக்குநர்.
- காலந்தோறும் தமிழ் சினிமா கட்டமைத்து வந்த மரபுகளைக் கட்டவிழ்க்க முனைந்தவர். இதுவரை காலமும் செயற்கை ஒளியில் பிடிக்கப்பட்ட படங்களிலிருந்து மாறுபட்டு, இயற்கை ஒளியிலிருந்து ஒளியமைப்புச் செய்தவர்.
  பாத்திர வார்ப்பு, இறுதிக்கட்டம் - மௌன நிலை.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கட்டுரை - ''பெருமரமாகிப் போனதொரு வாழ்வு''
- எழுது தாள், எழுது கருவிகள்
- பின்னிணைப்பு - 1

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கட்டுரையின் மையக்கருத்தை இனங்கண்டு எழுதுவார்.
- கட்டுரையின் துணைக்கருத்தை தொகுத்து எழுதுவார்.
- திரைப்படத் துறை பற்றி விமர்சித்து எழுதுவார்.
- தாம் அறிந்து கொண்ட விடயங்கள் பற்றி விபரித்து, ஆக்கங்களை எழுதுவார்.
- கட்டுரையின் மொழிநடை பற்றி விளக்கிக் கூறுவார்.
- கட்டுரையின் தலைப்புப் பொருத்தப்பாட்டினை விபரிப்பார்.
- இந்தியத் திரைப்படத் துறையில் எம் நாட்டவரின் பங்களிப்புப் பற்றி எழுதுவார்.

---

**பின்னிணைப்பு - 1**



(20.05.1939 - 13.02.2014)

சிறந்த ஒளிப்பதிவாளராக அறிமுகமான பாலு மகேந்திரா, கமராவின் முக்கியத்துவத்தை தமிழ்ச் சினிமாத் துறையில் உணரவைத்தவர்.

'மூன்றாம் பிறை', 'அழியாத கோலங்கள்', 'வீடு', 'சந்தியா ராகம்', 'மறுபடியும்', சதி லீலாவதி' என தமிழ் சினிமா ரசிகர்களால் மறக்க முடியாத படங்களை இயக்கியவர் பாலு மகேந்திரா. தனது படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தது மட்டுமன்றி, பல்வேறு இயக்குநர்களின் படங்களுக்கும் ஒளிப்பதிவு செய்திருக்கின்றார். இயக்குனர் மகேந்திரன் இயக்கிய 'முள்ளும் மலரும்' படத்தின் ஒளிப்பதிவாளர் பாலு மகேந்திராதான்.

சிறந்த ஒளிப்பதிவு மற்றும் சிறந்த படம் என ஐந்து முறை தேசிய விருது வென்றவர் பாலு மகேந்திரா. தேசிய விருது மட்டுமன்றி, கேரளா மற்றும் கர்நாடக மாநில அரசுகளின் விருதுகளையும் வென்றிருக்கின்றார். இயக்குநர் பாலா, ராம், வெற்றிமாறன் உள்ளிட்ட பல முன்னணி இயக்குநர்கள் இவரிடம் உதவி இயக்குநர்களாகப் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தேர்ச்சி 4.0 :** இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புறுமாற்றினை விளக்குவார்.

**விடய உள்ளடக்கம்:** மெல்லிசைப் பாடல்:
அ. " ஓ..வண்டிக்காரா....."

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள்:**

- கவிஞர் பற்றி அறிந்து கூறுவார்.
- பாடலை நயந்து வாசிப்பார்.
- பாடலின் பொருளைக் கூறுவார்.
- பாடலின் மையக்கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- பாடலை ஓசை நயத்துடன் பாடுவார்.
  (கிராமிய இசைப்பாடல் மெட்டில்)
- பாடலைக் கிரகித்து, வாசிப்பதுடன் தாமும் ஆக்கங்களைப் படைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலை இசையுடன் பாடிக்காட்டுதல் அல்லது ஒலிப்பதிவுக் கருவியைப் பயன்படுத்துதல்.
- கவிஞர் பற்றிய குறிப்புகளைக் கூறிக் கலந்துரையாடுதல்.
- மாணவரைக் குழுக்களாக்கி, பாடலை வாசிக்கச் செய்தல்.
- அருஞ்சொற்களைத் தொகுத்து அவற்றின் பொருளை அறிந்து கூறச் செய்தல்.
- பாடலின் பொருளை விளக்குதல்.
- தனித்தனியாக பாடலை நயந்து வாசிக்கச் செய்தல்.
- பாடலை ஓசைநயத்துடன் பாடச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- **கவிஞர் பற்றிய குறிப்புகள்**
  - கவிஞர் நீலாவணன் (1937 - 1967)
  - இயற்பெயர் - கே. சின்னத்துரை
- கிழக்கிலங்கை - பெரிய நீலாவணையைச் சேர்ந்தவர்.
- வேதாந்தி, கொழுவுதுறட்டி, அம்மாச்சி ஆறுமுகம், நீல சின்னத்துரை முதலிய புனைபெயர்களில் எழுதியவர்.
- வழி, வேளாண்மை, ஒத்திகை முதலிய நூல்களின் ஆசிரியர்.
- பாடும்மீன் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராக விளங்கியவர்.

- **அரும்பதங்களின் பொருள்**

  கா - சோலை
  கழனி - வயல்
  பிணி - நோய், துன்பம்

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாட நூல்
- காகிதாதிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடலின் பொருளை விளங்கிக் கூறுவார்.
- பாடலின் மையக் கருத்தைக் கூறுவார்.
- கவிஞரின் மனவுணர்வை விளக்குவார்.
- பாடலில் நயந்த பகுதிகளை விளக்குவார்.
- பாடலின் மொழிநடை பற்றிக் கருத்துக் கூறுவார்.
- கற்பனைத் திறனுக்கு ஏற்புடையதாக, ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி 4.0 :** இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புறுமாற்றினை விளக்குவார்.

**விடய உள்ளடக்கம்:** மெல்லிசைப் பாடல்:

ஆ. ''அழகான ஒரு சோடிக் கண்கள்''

**பாடவேளை :** 02

## கற்றற் பேறுகள்:

- கவிஞர் பற்றி அறிந்து கூறுவார்.
- பாடலை தெளிவான உச்சரிப்புடனும் நயந்தும் வாசிப்பார்.
- பாடலை ஓசைநயத்துடன் வாசிப்பார் / பாடுவார்.
- பாடலின் மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்கண்டு கூறுவார்.
- பாடலின் பொருளைக் கூறுவார்.
- பாடலைக் கிரகித்து வாசித்து தாமும் ஆக்கங்களைப் படைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடலைத் தெளிவான உச்சரிப்புடன் வாசித்துக்காட்டல்.
- ஒலிப்பதிவுக் கருவியைப் பயன்படுத்தி இசைப்பாடலாக பதிவுபெற்றுள்ளமையை முன்வைத்தல்.
- கவிஞர் பற்றிய விளக்கங்களை வெளிப்படுத்தியபின் குழுச்செயற்பாட்டுக்கு ஆற்றுப்படுத்தல்.
- மாணவர் இனங்கண்ட அருஞ்சொற்களுக்கு அகராதி வாயிலாகப் பொருளறியத் தூண்டுதல்.
- பாடலின் பொருள் பற்றி விளக்குதல் / எழுதுவித்தல்.
- பாடலைத் தனியாக நயந்து வாசிக்க இடமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- கவிஞர் பற்றிய குறிப்புகள்:
    - பாவலர் பஸீல் காரியப்பர்.
    - பிறப்பு - சம்மாந்துறை
    - வாழ்வு - (திருமணத்தின் பின்) கல்முனை.
    - கவிதைத் தொகுதி : ‘ஆத்மாவின் அலைகள்’

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- அகராதி
- எழுதுதாள், எழுதுகருவிகள்
- ஒலிநாடா அல்லது இறுவட்டு

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடலின் பொருளை விளக்கிக் கூறுவார்.
- பாடலின் மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றைக் கூறுவார்.
- கவிஞரின் மனவுணர்வுகளை விளக்கிக் கூறுவார்.
- பாடலின் நயந்த பகுதியை விளக்குவார்.
- பாடலின் மொழிநடை பற்றிக் கருத்துக் கூறுவார்.
- பாடலை விமர்சித்து எழுதுவார்.
- பாடல் / கவிதை ஒன்றை எழுதுவார்.

**தேர்ச்சி 3.0 :** பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பல்வேறுபட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்:** நாடகம் :
''வஞ்சியர் காண்டம்''

**பாடவேளை :** 10

**கற்றற் பேறுகள்:**

- பல்வேறு படைப்புகளை வாசிப்பதனூடாக, அவற்றினை இனங்கண்டு, கூறுவார்.
- நாடகப் பிரதி ஒன்றின் சிறப்புப் பண்புகளை விளக்குவார்.
- பாத்திரப் பண்புகள், குணச்சிறப்புகளை வெளிப்படுத்துவார்.
- பாத்திரங்களின் குண இயல்புகளுக்கு அமைவாக வெளிப்படும் உணர்வுகளை நடிப்பினூடாக வெளிக்காட்டுவார்.
- நாடகத்தில் இடம்பெறும் பாடல்களை இசையுடன் பாடுவார்.
- நாடகம் உணர்த்தும் விழுமியக் கருத்துக்களைப் பட்டியற்படுத்துவார்.
- நாடக ஆசிரியரின் கற்பனையாற்றலையும் படைப்பாற்றல் திறனையும் விமர்சனரீதியாக மதிப்பிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிலப்பதிகார ஆசிரியர் பற்றியும் வஞ்சிக் காண்டம் பற்றியும் அறிமுகம் செய்தல்.
- நாடகத்தை ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக வாசிக்க வழிப்படுத்துதல்.
- வாசித்துக் கிரகித்த விடயங்கள் தொடர்பாகக் குழுக் கலந்துரையாடலில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்கல்.
- கட்டுரையில் தரப்பட்டுள்ள விடயங்களை வாசிக்கச் செய்வதுடன், அவற்றை இரசிக்கச் செய்தல்.
- இவ்வாறான கவிதைகளை மாணவர்கள் குழுக்களாகவும் தனியாகவும் எழுத வழிப்படுத்தல்.
- குழுக்கள் கலந்துரையாடலின் பின்னர், பாத்திரமேற்று நடிக்க இடமளித்தல்.
- நாடகம் ஏற்படுத்தும் உணர்வு நிலையிலிருந்து, சிறுகதை ஒன்றைப் படைப்பது தொடர்பாக கலந்துரையாடல்.
- மாணவர்கள் இந்த நாடகப் பிரதியில் உள்ள அரும்பதங்களைத் தொகுத்து, அகராதி -யிலிருந்து பொருள்கண்டு, கூறுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- **வஞ்சிக் காண்டம்:** சேரன் செங்குட்டுவனின் தம்பியான இளங்கோவடிகளால் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தின் இறுதிப்பகுதியே வஞ்சிக்காண்டம்.
- நாடக ஆசிரியர் பற்றிய குறிப்புகள்:
  பிரளயன் (சண்முகசுந்தரம் சந்திரசேரகன்) இந்தியாவில் சென்னை (தமிழகத்தில்) வசிக்கிறார்.

- நவீன நாடகப் பயிற்சி பெற்று, நாடகக் குழுக்களைப் பயிற்றுவித்து பிரதியாக்கம் செய்வதுடன் தொடர்ந்து நாடகங்களை இயக்கி மேடையேற்றி வருகிறார்.
- பாரி - கபிலர் உறையும் பறம்பு மலை வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட ''பாரி படுகளம்'' நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.
- இவரது ''உபகதை'' என்ற நாடகம், புராண - இதிகாச பாத்திரங்களை மறுவாசிப்பு செய்யும் வகையில் படைக்கப்பட்டுள்ளது.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- அகராதி
- எழுதுதாள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- படைப்பாளி, பெண் விடுதலை குறித்து வெளிப்படுத்தும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை எழுதுவார்.
- நாடகப் பாத்திரங்களையும் அவற்றின் குணப் பண்புகளையும் கூறுவார்.
- நாடகத்தின் மொழிநடை பற்றி எழுதுவார்.
- பாத்திரத்தின் இயல்பு வெளிப்படும் வகையில் மொழிக் கையாளுகை எவ்வாறு வேறுபடுகிறது என்பதைக் கூறுவார்.
- நாடகம் ஏற்படுத்திய உணர்வு / அறிவு தாக்கம் பற்றிக் கூறுவார்.
- இலக்கியத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.
- நண்பர்களுடன் இணைந்து நடிப்பார்.